2014 பிப்ரவரி 17]

அரசு நிதியின் மூலமாகவும், மாநில அரசின் பங்களிப்புடனும் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்படுகின்றன. நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 12-வது நிதிக் குழு, 13-வது நிதிக் குழுவின் நிதியினைப் பெற்றும் குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், குடிசை மாற்று வாரிய வீடுகள், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் கட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, 14-வது நிதிக் குழுவில் 7,150 கோடி ரூபாய் அளவிற்கு நிதி கேட்டிருக்கிறார்கள்; மாநில அரசின் பங்கு 7,150 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 14,300 கோடி ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. 2015-2020-ல் அதற்கான நிதி கிடைத்தால், நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து பேரூராட்சி, நகராட்சிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

51—

தக்காளிக் கூழ் தொழிற்சாலை

***7500—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவது

குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் அந்தத் தொகுதியில் முன்வருவார்களேயானால், அரசின் சார்பாக பல்வேறு மானியங்கள் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள்பேரில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, தனியார்கள் தக்காளிக் கூழ் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், என்னென்ன சலுகைகள் கிடைக்க ஆவன செய்யும் என்பதை விளக்கமாகக் கூற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு மானியங்களை இதுபோன்று தொழிற்சாலை அமைக்க முன்வருபவர்களுக்குத் தந்துகொண்டிருக்கிறது. இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு, அதில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்படும். உற்பத்தி தொடங்கிய ஐந்து ஆண்டுகளில், முதல் மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் தொழில் நிறுவனங்களுக்குக் கூடுதலாக 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை மானியம் தரப்படும். அதேபோன்று, 320 கே.வி.ஏ. வரை நிறுவுதிறன் உள்ள மின்னாக்கிகளின் விலையில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை தரப்படும். இதுபோன்ற மானியங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக அவர்களுக்கு வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, உலகத்தார்க்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் நல்லரசு, தனியார் தொழிற்சாலை துவங்க முன்வந்தால் என்னென்ன மானியங்கள் கிடைக்கும் என்பதை விளக்கமாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உலகத்தாராகிய தேருக்கும், அதற்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளுக்கும் சாரதியாக இருந்து, சாதனைகள்மூலம் சரித்திரம் படைத்து வாரி, வாரி வழங்கும் எங்கள் இதய தெய்வம், ஒன்பதாவது வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

52—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***35319—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,